தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 17, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 செப்டம்பர் 2, வியாழக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.”

நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சிமெண்ட் விலை

***1233—திரு. இரா. அருள்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சிமென்ட் விலையைக் கட்டுப்படுத்த அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரைக்கும் எல்லோருக்கும் வாழ்க்கையில் ஒரே இலட்சியம் என்னவென்றால், சிறியதோ, பெரியதோ அவரவர்கள் தகுதிக்கு ஏற்றாற்போல் ஒரு வீடு கட்ட வேண்டும் என்பதுதான். சிமென்ட்டைப் பொறுத்தவரைக்கும், அது கட்டுமானத்தின் ஒரு முக்கியமான அங்கம். இன்றைக்கு வீட்டைப் பழுதுபார்ப்பதற்குக்கூட வழியில்லை. என்ன காரணமென்றால், சிமென்ட் விலை அதிகமாக ஏறியிருக்கிறது. பெரிய அளவிலான கட்டுமானத் தொழில்கூட மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் தொழிலாளர்கள் எல்லாம் வேலை இழக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களில் ரூ.300–350 என்கிற range-ல் விற்கப்படுகிற சிமென்ட்டை நம்முடைய தமிழ்நாட்டில் கட்டுக்கடங்காமல் ரூ.480/–, ரூ.490/– என்ற அளவில் இன்றைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணமென்றால் ஆலை அதிபர்களெல்லாம் syndicate அமைத்துக்கொண்டு, தினசரி விலையை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் ஒரேயொரு ஆலோசனையைச் சொல்கிறேன். அரசு சிமென்ட் உற்பத்தியைப் பெருக்கி விலை நிர்ணயம் செய்ய வேண்டும். குறிப்பாக, அரசு சிமென்ட் ஆலையில் ஒரு மூட்டை சிமென்ட் உற்பத்திக்கு எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கிட்டு, அதற்குமேல் 25 percent இலாபத்தை வைத்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.

திரு. இரா. அருள்: வரியையும் அதில் சேர்த்து, அரசு ஒரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2021 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விலையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டின் துவக்கத்தில், அதாவது 2021 ஆம் ஆண்டின் துவக்கத்தில் 420 ரூபாயாக இருந்து, தொடர்ந்து உயர்ந்துகொண்டே வந்து ஜுன் மாதத்தில் 490 ரூபாய் அளவிற்கு சிமெண்ட் விலை உயர்ந்துள்ளது. சிமெண்ட் விலை இவ்வாறு உயர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று எனக்கு அறிவுறுத்தினார்கள். அதன் பிறகு, கடந்த ஜுன் மாதம் 16 ஆம் தேதி, சிமெண்ட் ஆலை அதிபர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டி, உடனடியாக சிமெண்ட் விலையை நீங்கள் குறைத்திட வேண்டுமென்று அவர்களுக்கு நாங்கள் அறிவுறுத்தினோம். இந்தக் கூட்டத்திற்கு முன்பாக, ஜுன் மாதத்தில் 490 ரூபாயாக சிமெண்ட் விலை இருந்தது. கூட்டத்திற்குப் பிறகு அரசு, அவர்களிடத்தில் சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தியது. இந்தக் கொரோனா பொது முடக்கக் காலத்தில்* continuous process industries— *தொடர்ச்சியாக இயங்கக்கூடிய நிறுவனங்கள் என்ற வகையில் சிமெண்ட் தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், அங்கே கட்டுமானம் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான அனுமதிகளையும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களிடத்தில் "உங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்திருக்கிறோம். சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டதற்குப் பிறகு, விலை குறைக்கப்பட்டு 450 ரூபாய் என்ற அளவில் விலை இருந்தது. இப்பொழுது முதல் தரமாக இருக்கக்கூடிய* Ramco cements, India cements *போன்றவற்றின் விலை 420 ரூபாய். கடந்த 31–8–2021 ஆம் தேதியில், முதல் தரமான சிமெண்ட் 420 ரூபாய் என்ற விலை விவரங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. அந்த அளவிற்கு விலை குறைந்திருக்கிறது.*

நம்முடைய TANCEM cement*-ஐப் பொறுத்தவரையில், உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அரியலூரில் இருக்கக்கூடிய* plant*-ஐத் தவிர 10 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியாகக்கூடிய ஒரு புதிய* plant *போட்டிருக்கிறோம். ஆக, உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த புது* plant *வந்த*

பிறகு, ஒட்டுமொத்த உற்பத்தி மூன்று plant–களிலும் சேர்த்து, 17 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும். வரக்கூடிய ஆண்டுகளுக்கு 13.86 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்வதற்கான இலக்குகளை நிர்ணயித்திருக்கிறோம். அதற்காக ஏறத்தாழ 9.35 மெட்ரிக் டன் clinker தேவைப்படுகிறது. புதிய ஆலையிலிருந்து அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அது வருகிறபொழுது சிமென்ட் உற்பத்தி அதிகமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'வலிமை' என்கிற பெயரில் TANCEM cement–ன் ஒரு புதிய brand–ஐ அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசு சிமென்ட் உற்பத்தியைப் பெருக்கி அது சந்தைக்குக் குறைவான விலைக்கு வருகிறபோது–ஏற்கெனவே இருப்பதுபோல DRDA–க்கு மட்டுமல்லாமல் வெளிச் சந்தைக்கும் வரும்போது சிமென்ட் விலை குறையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, இது ஒரு deregulated commodity என்கின்ற வகையில், அரசு தொடர் கண்காணிப்பில் வைத்து எல்லா வகையிலும் விலைக் குறைப்புக்கான நடவடிக்கைகளை முழுமையாக எடுத்து வருகிறது.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆலோசனையின்பேரில், உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற உற்பத்தியை இன்னும் நான்கு மடங்கு அதிகரிக்க வேண்டும். அரசு சிமென்ட் ஆலையில் நான்கு மடங்கு உற்பத்தியை அதிகரித்து, குறைந்த விலையில் தரமான சிமென்டை நாம் வழங்கினால், தனியார் ஆலைகள் என்ன syndicate அமைத்தாலும் மக்கள் அங்கு செல்லமாட்டார்கள். வெறும் 10 முதலாளிகள் சேர்ந்துகொண்டு syndicate அமைத்து, இன்றைக்கு பல கோடி மக்களை பாதிப்புக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும் அதனைத் தடுக்க இரும்புக் கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிமென்ட் உற்பத்தி அதிகரிக்கப்படும் என்று

2021 செப்டம்பர் 2]

கூறியிருக்கின்ற தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 'வலிமை' என்ற பெயரில் புதிய brand*-ல் சிமென்டை அறிமுகப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நன்றிக்கு நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிடுங்கள்.*

வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது, மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

இட ஒதுக்கீடு

***384—திரு. ப. அப்துல் சமது:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஆம். மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் உள்ள 4 சதவிகித இட ஒதுக்கீட்டை முழுமையாக அமல்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.